முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.

நாள். 17.03.2026.

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**

**அசல் வழக்கு எண்.110/2024**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 17ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லோகநாதன் | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | முனுசாமி | வயது | : | 39 |
| ஊர் | : | செய்யாறு | தொழில் | : | தனியார் ஊழியர் |

**வா.சா. 1 (லோகநாதன்) : வாதி தரப்பில் முதல் சாட்சியின் முதல் விசாரணை தொடர்ச்சி:**

நான் ஏற்கனவே என் பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். இன்று ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

**கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.**

1. 06.02.2026 தேதியிட்ட 1ம் வாதி தனது மகனை நியமனம் செய்ததற்கான Power of Attorney **வா.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.
2. 1ம் வாதியின் தந்தை வேதபுரியின் பெயரிலுள்ள மின் கட்டண ரசீது அசல் 14 ஆன்லைன் 8 மொத்தம் 22 **வா.சா.ஆ.2 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.
3. நகராட்சியால் வழங்கப்பட்ட 1ம் வாதி முனுசாமி பெயரிலுள்ள குடிநீர் கட்டண ரசீது அசல் 16 பில்கள் **வா.சா.ஆ.3 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.
4. 01.08.2025 தேதியிட்ட திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து கொடுக்கப்பட்ட மேலெழுத்து கடிதம் மற்றும் சர்வே எண் 16, 17க்கான அ பதிவேடு சான்றிட்ட நகல்கள் **வா.சா.ஆ.4 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

**(கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2026.03.17 18:35:28 +05'30'

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு